TNKR080010182023

சார்பு நீதிமன்றம்
குளித்தலை
முன்னிலை... திரு.ஈ.முத்துசாமி, பி.ஏ.,பி.எல்.,
சார்பு நீதிபதி, குளித்தலை
2025 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 18 ம் நாள் வெள்ளிக்கிழமை
அசல் வழக்கு எண்.414 / 2023
CNR NO.TNKR-08-001018-2023

ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா, குளித்தலை கிளை,

அதன் சார்பாக கிளை மேலாளர் ...வாதி

.... எதிர் .....

T.ஜெகதீசன் ...பிரதிவாதி

தீர்ப்புரை

வாதியின் வங்கியிடம் இருந்து பிரதிவாதிகள் பெற்ற கடன் மற்றும் வட்டி தொகையான ரூ.3,80,205.00/- (ரூபாய் மூன்று இலட்சத்து என்பதாயிரத்து இருநூற்றி ஐந்து மட்டும்) தொகையை 10.60/-சதவீத வட்டியுடன் செலுத்தக்கோரி வாதியால் வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| வழக்கு தாக்கல் செய்யப்பட்ட நாள் | : 05.09.2023 |
| இறுதி விசாரணை நடைபெற்ற நாள் | : 16.07.2025 |
| தீர்ப்புரை பகரப்பட்ட நாள் | : 18.07.2025 |
| வாதிக்காக | : திரு.K. ஷேக் அன்வர்தீன்- வழக்கறிஞர் |
| பிரதிவாதிக்காக | : பிரதிவாதி தரப்பில் போதிய வாய்ப்பு அளித்து ஆஜராகாத காரணத்தினால் தோன்றாதரப்பினராகியுள்ளார். |

1. பிராதின் சுருக்கம்

இவ்வழக்கின் வாதி வங்கியிடம் பிரதிவாதியானவர் விவசாய கரும்பு அபிவிருத்திக்காக கடந்த 16.04.2012ம் தேதி ரூ.1,46,000/−த்தை கடனாக கேட்க மேற்படி கடன் தொகைக்கு ஆண்டு ஒன்றுக்கு 7.00/− சதவிகிதம் வட்டி செலுத்துவதாக ஒப்புக்கொண்டு அன்றைய தினமே கொதுவை ஒப்பந்தம் பிறப்பித்துக்கொடுத்துள்ளார். வாதியின் வங்கியிலிருந்து பிரதிவாதியை தொடர்பு கொண்டு பிரதிவாதி பெற்ற கடன் தொகையை திரும்ப செலுத்த கோரி கேட்க மேற்படி பிரதிவாதியானவர் கடன் தொகையை திரும்ப செலுத்தவில்லை. எனவே, வாதியின் வங்கியிடம் இருந்து பிரதிவாதிகள் பெற்ற கடன் மற்றும் வட்டி தொகையான ரூ.3,80,205.00/− (ரூபாய் மூன்று இலட்சத்து என்பதாயிரத்து இருநூற்றி ஐந்து மட்டும்) தொகையை 10.60/−சதவீத வட்டியுடன் செலுத்தக்கோரி வாதியால் வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. பிரதிவாதி தரப்பில் போதிய வாய்ப்பளித்தும் ஆஜராகாத காரணத்தினால் தோன்றாதரப்பினர்களாக கருதப்படுகிறார்கள்.

3. வாதி தரப்பில் ஒரு கௌதமன் என்பவரை வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.7 வரையிலான ஆவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

4. வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவருடைய வாதுரையில் வாதி அவரது வழக்கினை தகுந்த சாட்சி மற்றும் சான்றாவணங்கள் வாயிலாக நிரூபித்துள்ளதால், வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என வாதிட்டார்.

5) தீர்வு

(அ) வா.சா.1 அவரது முதல் விசாரணையில் இவ்வழக்கின் வாதி வங்கியிடம் பிரதிவாதியானவர் விவசாய கரும்பு அபிவிருத்திக்காக கடந்த 16.04.2012ம் தேதி ரூ.1,46,000/−த்தை கடனாக கேட்க மேற்படி கடன் தொகைக்கு ஆண்டு ஒன்றுக்கு 7.00/− சதவிகிதம் வட்டி செலுத்துவதாக ஒப்புக்கொண்டு அன்றைய தினமே கொதுவை ஒப்பந்தம் பிறப்பித்துக்கொடுத்துள்ளார். வாதியின் வங்கியிலிருந்து

பிரதிவாதியை தொடர்பு கொண்டு பிரதிவாதி பெற்ற கடன் தொகையை திரும்ப செலுத்த கோரி கேட்க மேற்படி பிரதிவாதியானவர் கடன் தொகையை திரும்ப செலுத்தவில்லை. எனவே, வாதியின் வங்கியிடம் இருந்து பிரதிவாதிகள் பெற்ற கடன் மற்றும் வட்டி தொகையான ரூ.3,80,205.00/– (ரூபாய் மூன்று இலட்சத்து என்பதாயிரத்து இருநூற்றி ஐந்து மட்டும்) தொகையை 10.60/–சதவீத வட்டியுடன் செலுத்தக்கோரி வாதியால் வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

(ஆ) வாதி வங்கியிடம் பிரதிவாதி கடன் பெற்றுக்கொண்டு அதற்காக வா.சா.ஆ–2 கொதுவை ஒப்பந்தம் பிறப்பித்துக்கொடுத்துள்ளார் என்கின்ற சங்கதியையும் மேற்படி வாதி வங்கிக்கு பிரதிவாதியானவர் ஏற்பாட்டு கடிதம் பிறப்பித்துக்கொடுத்துள்ளார் என்கின்ற சங்கதியையும் வா.சா.ஆ 3 ஆவணத்தின் வாயிலாகவும் அறிந்து கொள்ளமுடிகிறது. வாதி அவரது வழக்கினை வா.சா.1 வாய்மொழி சாட்சியத்தின் அடிப்படையிலும வா.சா.ஆ 1 முதல் 7 வரையிலான ஆவணங்கள் வாயிலாகவும் வாதி நிரூபணம் செய்துள்ளதால் வாதிகோரிய பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என முடிவு செய்யப்படுகிறது.

முடிவாக, வாதியின் வழக்கானது செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்பட்டு, பிரதிவாதியானவர் வாதியின் வங்கிக்கு செலுத்த வேண்டிய கடன் தொகை ரூ.1,46,000/–ம் தாவா தொகை ரூ.3,80,205/–ற்கு தாவா தேதி முதல் தீர்ப்பு தேதி வரை 9% வட்டியும், தீர்ப்பு தேதி முதல் தொகை வசூலாகும் காலம் வரையிலான காலத்திற்கு 6% வட்டியும் செலுத்த வேண்டும் என்று தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2025 ம் ஆண்டு ஜுலை மாதம் 18 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒம்/– (ஈ.முத்துசாமி)

சார்பு நீதிபதி,
குளித்தலை.

வாதி தரப்பு சாட்சி –

வா.சா.1 – கௌதமன்

வாதி தரப்பு சான்றாவணங்கள் –

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 14.06.2012 | பிரதிவாதி வாதியிடம் டெர்ம் கடன் பெற கொடுத்த விண்ணப்பம் அசல் |
| வா.சா.ஆ.2 | 14.06.2012 | பிரதிவாதி வாதி வங்கிக்கு எழுதிக்கொடுத்துள்ள கொதுவை ஒப்பந்தம் அசல் |
| வா.சா.ஆ.3 | 14.06.2012 | பிரதிவாதி வாதி வங்கிக்கு எழுத்துக்கொடுத்து ஏற்பாட்டு கடிதம் (arrangement letter) அசல் |
| வா.சா.ஆ.4 | 08.04.2015 | பிரதிவாதி வாதி வங்கிக்கு எழுதிக்கொடுத்த உயிர்ப்பிப்பு கடிதம் அசல் |
| வா.சா.ஆ.5 | 28.03.2018 | பிரதிவாதி வாதி வங்கிக்கு எழுதிக்கொடுத்த உயிர்ப்பிப்பு கடிதம் அசல் |
| வா.சா.ஆ.6 | 20.03.2021 | பிரதிவாதி வாதி வங்கிக்கு எழுதிக்கொடுத்த உயிர்ப்பிப்பு கடிதம் அசல் |
| வா.சா.ஆ.7 | 03.07.2023 | வாதி வங்கியின் பிரதிவாதி கணக்கு பட்டியல் அசல் |

பிரதிவாதி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் – இல்லை.

ஒம்/– (ஈ.முத்துசாமி)
சார்பு நீதிபதி,
குளித்தலை.